நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.29/2024

<u>அ.சா: 3 (LW 3)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வமுருகன் | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

03.08.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
---------------------------------------------------------------

(எதிரி ஆஜர் )

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் <u>11.43</u>

நான் ஆண்டிபட்டி தாலுகா நல்லமுடிபட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 விசாலாட்சி மற்றும் அசா.2 காளியப்பன் எனது உறவுக்கார் ஆவார்கள். ஆஜர் எதிரி ஈஸ்வரனை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர் ஆவார். 12.05.2023 மற்றும் 13.05.2023 அன்று எங்கள் ஊரில் திருவிழா நடந்தது நான் மைக்செட் போடுவேன். 13.05.2023 அன்று காலை 11.30 மணியவில் நாங்கள் கன்னிமார் கோவிலில் சாமிகும்பிட்டு விட்டு பத்திரகாளியம்மன் கோவிலுக்கு வந்துகொண்டிருந்தோம். சம்பத் டீ கடை அருகே எதிரி ஈஸ்வரன் அவர் வைத்திருந்த கத்தியால் காளியப்பனின் தோள்பட்டை கீழ் இடுப்பு பக்கத்தில் குத்தினார். பக்கத்தில் இருக்கும் நான் மற்றும் 4 அல்லது 5 நபர்கள் அவரை பிடிக்க முயன்றபோது அவர்

கத்தியுடன் தப்பிச்சென்றுவிட்டார். 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு தாமதம் ஆனதால் நான் மற்றும் குமார் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் காளியப்பனை நடுவில் உட்கார வைத்து தனியார் மருததுவமனையான அய்யனார் மருத்துமவனையில் சேர்த்தோம். அவர்கள் ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள். பிச்சம்பட்டி அருகே 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் காளியப்பனை அதில் ஏற்றி அவரை ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவரை மேல்சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். இது சம்மந்தமாக அ.சா.1 விசாலாட்சி போலிசாரிடம் சம்பவம் பற்றி வாக்குமூலம் கொடுத்தார். இருவருக்கும் இடையே எதிரி மனைவி தொடர்பாக பிரச்சனை இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணக்கு முன்வரவில்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.03 18:30:20 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:03.08.2026